IN THE COURT OF PRINCIPAL DISTRICT JUDGE, SALEM.

OS. No. 80/2022

DW-2 is solemnly affirmed on 02.03.2026 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | K.தேவன் | Caste | : | |
| S/o. | : | குஞ்சான் நாயக்கர் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

முதல் விசாரணை :

நான் மேற்படி வழக்கில் 3ம் தரப்பினர் ஆவேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் பிரதிவாதி தரப்பு சாட்சியாக நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நானும் மாதையன் கவுண்டரும் சுப்ரமணி என்பவருக்கு மற்றொரு மாது என்பவரிடமிருந்து பணம் வாங்கி கொடுத்தோம். சுப்ரமணிக்கும் மாதையன் கவுண்டருக்கும்தான் பழக்கம். என்னை மாதையன் கவுண்டர் அழைத்து சென்று பணம் கேட்கிறார், சாட்சி கையெழுத்து வேண்டும் என்று கேட்டார். நான் சாட்சி கையெழுத்து போட்டு கொடுத்தேன். தேதி எனக்கு தெரியவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள 2வது சாட்சி கையெழுத்து என்னுடையது. கையெழுத்து கேட்டார், நான் யதார்த்தமாக கையெழுத்து போட்டு கொடுத்தேன், எவ்வளவு பணம் கேட்டார் என்ற மற்ற விவரங்கள் தெரியாது.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் எந்த ஊர் என்றால் செக்காரப்பட்டி டேம் அருகில் எட்டால்காடு என்ற ஊரை சார்ந்தவன். வழக்கை மாது என்பவர் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரி. பிரதிவாதி மாதையன் எந்த ஊர் என்றால் கருங்கல்லூர். வாதி மாதுவும் பிரதிவாதியும் ஒரே ஊர்க்காரர்களா என்றால் இல்லை. பக்கத்து ஊர்க்காரர்கள். வாதிக்கு வி.மேட்டுரை சேர்ந்தவர் என்றால் சரி. அந்த ஊரில் வாதியின் தாய் தந்தை, சகோதரர்கள் மற்றும் விவசாய நிலங்கள் உள்ளது என்றால் சரி.

பிரதிவாதியின் நிலமும் வாதியின் நிலத்திற்கு பக்கத்தில் உள்ளது என்றால் ஆனால் ஆற்றைத்தாண்டி உள்ளது. வாதி, பிரதிவாதியின் நிலத்தின் பேரில் ஒப்பந்தம் போட்டு ஓமலூர் பதிவு அலுவலகத்தில் பதிவு செய்துள்ளார்கள் என்றால் ஓமலூர் பதிவு அலுவலகத்திற்கு சென்று கையெழுத்து போட்டு கொடுத்தேன். ஆனால் அது என்ன ஒப்பந்தம் என்று தெரியாது.

என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.1 பத்திரத்தில் நான் ஓமலூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் வைத்து கையெழுத்து போட்டேன் என்றால் சரி. வாதி மாது, இந்த வா.சா.ஆ.1 ஒப்பந்ததிற்கு பின்னிட்டு தாவா சொத்தை பிரதிவாதி வாதி பெயருக்கு கிரயப்பத்திரம் பதிவு செய்து தர என் மூலம் கேட்டாரா என்றால் கேட்டார். எத்தனை முறை வாதி அவ்வாறு கேட்டார் என்றால் 2,3 முறை கேட்டார். அதற்கு பிரதிவாதி என்ன சொன்னார் என்றால் பணம் தருகிறேன்

பணம் கொடுத்துவிடலாம் என்று சொன்னார், நான் சரி என்று சொல்லிவிட்டேன். வாதி பலமுறை கேட்டும் பிரதிவாதி கிரயம் செய்து தரவில்லை என்றால் பணம்தான் தர முடியும் என்று சொன்னார். ஒப்பந்தப்படி சுப்ரமணி நடக்காததால் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரி.

பிரதிவாதி ஒப்பந்தப்படி நடந்திருந்தால் வாதி வழக்கு தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்றால் பணம் கொடுத்திருந்தால் வழக்கு தாக்கல் செய்திருக்க மாட்டார். பிரதிவாதி நிலத்தை கிரயம் செய்து கொடுத்திருந்தால் வாதி வழக்கு தாக்கல் செய்திருக்க மாட்டார் என்றால் தெரியவில்லை. வாதியை பொறுத்தவரை பிரதிவாதி நிலத்தை கொடுத்தால் தற்போதும் கிரயம் செய்ய தயாராக இருக்கிறார் என்றால் சரி. ஒப்பந்தம் போட்டது பற்றி எனக்கு நன்றாக தெரியும் என்றால் சரி.

மறுவிசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,
Principal District Judge, Salem.